1975 அக்டோபர் 28]

இடமாகக் காட்சியளிக்கிறது. கரிகால் வளவனுக்குச் செய்ததை கங்கை கொண்ட சோழனுக்குச் செய்ய முடியும். கங்கை கொண்ட சோழனின் புகழ் வாய்ந்த இடத்திலே அரசு 'ஒலி-ஒளிக் காட்சி'யை அமைக்க வேண்டு மென்பது என்னுடைய வேண்டுகோள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கங்கை கொண்ட சோழ புரத்திலுள்ள கோயிலை நிர்வகிக்கும் பொறுப்பு நம்முடையதல்ல. இப்போது நாம் அங்குள்ள கோயிலைப் புதுப்பிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். தஞ்சைக் கோயிலைப் புதுப்பிக்கும் பணி கூட இன்னும் முடிவடையவில்லை. கங்கை கொண்ட சோழபுரம் கோயில் கலன் அடையாமல், வீழ்ந்து விடாமல் இருக்கத்தான் நாம் மைய அரசிடம் எங்களிடம் அதன் நிர்வாகத்தைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களின் நிர் வாகத்தின் கீழ்தான் இப்பொழுது அந்தக் கோயிலை வைத்துக்கொண்டிருக் கிறார்கள். கங்கை கொண்ட சோழபுரக் கோயில் தஞ்சைக் கோயிலை விட மிகவும் பழமை வாய்ந்ததாக இருக்கிறது.

Earned Leave for Teachers of Aided High Schools.

*33 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the teaching staff of the Aided High Schools are granted earned leave benefits with effect from 1st April 1968; and

(*b*) if so, the reason for not extending the same benefits to the non-teaching staff of the Aided High Schools also, from that date ?

அரசு மானிய உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மானிய உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 1—4—1968 ஆம் நாளிலிருந்து ஈட்டிய விடுப்பு நன்மைகள் வழங்கப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அந்நாளிலிருந்து அப்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் அத்தகைய நன்மை அளிக்காததன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தனியார் துறையிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு விடுப்புச் சலுகைகளை வழங்குவது பற்றிய பொருள் டாக்டர் பால் குழுவிடம் விடப்பட்டது. இக்குழு மேற்படி பணியாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கும் விடுப்புச் சலுகைகளை வழங்கலாமென பரிந்துரைத்தது. அரசு இப்பரிந்துரையை ஏற்று 4—1—1973 முதல் அதாவது அரசாணை வெளியிட்ட நாள் முதல் அவ்வாறே விடுப்புச் சலுகைகளை வழங்கிவருகிறது.

திரு. கே. எஸ். கணபதி: இந்த அவையில் நான் ஏற்கெனவே இது குறித்து அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். அவர்களும் ஆசிரியர்களைப் போல நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கும் ஓய்வு நாட்கள்தான் விடுமுறை நாட்களாக இருக்கின்றன. எனவே வேலை நடக்கவில்லை. எனவே அவர்களுக்கு இந்தச் சலுகையைக் கொடுத்தால் விடுமுறை நாட்களிலும் பள்ளிக்கு வர இயலும். இப்போது விடுமுறை நாட்களில் அவர்கள் பள்ளிக்கு வராததால், தலைமை ஆசிரியர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. 1½ மாத காலத்திற்கு இவர்கள் பள்ளிக்கு வர மாட்டேன் என்கிறார்கள். சட்டப்படி அவர்களுக்கு விடுப்பு முழுமையாக உண்டு. மற்ற அரசாங்க ஊழியர்களைப் போல் அல்லாமல், ஆசிரியர்களைப் போல் மாற்றுகிறார்கள். இந்த நிலையை மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசுப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர் அல்லாதவர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ அத்தனையும் தனியார் பள்ளிகளில் பணி புரிகின்றவர்களுக்கும் உண்டு. இந்த விடுப்புச் சலுகையை, மற்றவர்களைப் போல் இவர்களும் அனுபவிக்க உரிமையுண்டு என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் விடுமுறை எடுக்கக் கூடாதென்று நாம் சொன்னால், அதற்குரிய விடுமுறை அளிக்கப்படும் என்று ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கு தலைமை ஆசிரியர்கள் கேட்கிறார்களோ அங்கெல்லாம் கொடுக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி : 4—1—1973 முதல் அவர்கள் விருப்பப்பட்டால், எடுத்துக்கொள்ளலாமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி அலுவலகத்தில் எந்த விதமான தகவலும் இல்லை. அது குறித்து அவர்கள் நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கல்வி இலாகாவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தேவையிருந்தால், அது பற்றி யோசிக்கலாம்.

Reinstatement of Doctor pending enquiry

*34 *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether a doctor attached to the Government Hospital Musiri, Tiruchirappalli district, on whom enquiry was conducted in 1974, for certain allegations against him, was reinstated at Musiri itself, before the conclusion of the enquiry; and

(*b*) the basis on which he was reinstated as such ?

விசாரணையில் உள்ள மருத்துவ அதிகாரி மீண்டும் வேலையில் நியமனம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி அரசினர் மருத்துவமனையில், குற்றம் புரிந்ததாக 1974 ஆம் ஆண்டு விசாரணையில் உள்ள டாக்டர், விசாரணை முடிவதற்குள் முசிரியிலேயே மறுபடியும் வேலையில் அமர்த்தப்பட்டாரா ?

(இ) ஆமெனில், எந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டார் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, (அ) & (இ) குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணையில் உள்ள மருத்துவ அதிகாரி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர் அவர்களால் 26—10—1974 அன்று முசிறி அரசினர் மருத்துவ மனைக்கு மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டார். ஒழுக்கக் கண்காணிப்பு பற்றிய விரிவான புலனாய்வு வெகு